# கோட்டை இராசதானி



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education

**தேர்ச்சி மட்டம் : கோட்ட இராசதானி பயிற்சி நுணுகி ஆராய்வர்**

## 6ம் பராக்கிரமபாகு மன்னன்

- கோட்டை இராசதானி 6ம் பராக்கிரமபாகுவின் ஆட்சியேற்புடன் ஆரம்பமாகின்றது.
- கி.பி 1412ல் றைகமவில் ஆட்சியதிகாரம் பெற்ற இவன் கி.பி 1415ல் ஜயவர்த்தனபுரக் கோட்டையைத் தனது ஆட்சி மையத் தளமாக அமைத்துக் கொண்டான்.
- இவர் பற்றி அறிய உதவும் மூலாதாரங்கள்

  இலக்கியம் - ராஜாவலிய , அழகேஸ்வரயுத்தம் , பெரகும்பாசிரித , சந்தேஷகாவிய , காவிய சோர , கூட்கோவின் அறிக்கை

  தொல்பொருள் - பெப்பிலியான கல்வெட்டு , சமன் தெவாலய கல்வெட்டு, தெனவக சாசனம் , கடலாதெனிய கல்வெட்டு , மடவள கல்வெட்டு
- மன்னனது சிறுபராயம் , அரச பதவியேற்பு , மற்றும் ஆட்சியுரிமை என்பன பற்றிய பல்வேறு பாரம்பரிய கதைகள் பிற்கால எழுத்தாளர்களது நூல்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
- பெரகும்பாசிரிதவில் உள்ளதன்படி அவரது தந்தை கம்பளையை ஆட்சி செய்த 5ம் பராக்கிரமபாகுவின் பேரனொருவனானெ லமனிஜயமஹலேன (ஜயபால மஹீபதி) என்பவராவார். தாய் சுனேத்திரா தேவியாவார். 6ம் பராக்கிரமபாகு காலத்தில் இலங்கை வந்த வக்காள சமஸ்கிருத எழுத்தாளரான ஸ்ரீ ராமச்சந்திர பாரதியம் அதனை உறுதிப்படுத்தியுள்ளார்.
- ராஜாவல்லியவில் குறிப்பிடுவதன்படி கம்பளை யுகத்தில் இலங்கையை ஆக்கிரமிப்புச் செய்த தளபதி செங்கோவினால் வீர அழகேஷ்வர மற்றும் அவரது உறவினர்கள் சீனாவுக்கு கொண்டு செல்லப்பட்ட போது அதில் ஜயமஹலேனவும் இருந்ததாக காணப்படுகின்றத. அதன் பின்னர் இளவரசர் பராக்கிரமபாகு தன் தாயுடன் பிரதேச ஆட்சியாளன் ஒருவரது பாதுகாப்பின் கீழ் வாழ்ந்துள்ளார்.
- சீனத்தளபதியினால் இளவரசர் பராக்கிரமபாகுவும் சீனாவுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் பின்னர் பேரரசனால் இளவரசனுக்கு அபயமளிக்கப்பட்டதாகவும் அவனை இலங்கைக்கு அனுப்பி அரசனாக்கியதாகவும் போர்த்துக்கேய வரலாற்றாசிரியர் ஒருவரான தியோகுத குட்டோ குறிப்பிட்டுள்ளார்.

தொகுப்பு : திருமதி. த.சதீஸ்கரன், ஆசிரியர், (வரலாறு) (யா/அத்தியார் இந்து கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு வே.தனேஸ்குமார் , ஆசிரியர் (த.தொ.தொ.) (கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## அரசியல் ரீதியிலான முக்கியத்துவம்.

- 1ம் பராக்கிரமபாகுவின் பின்னர் இலங்கை ஒன்றுபடுத்த முடிந்தமையும் , அதனை நிலையாகப் பேணியமையும் , அதற்காக அவர் கையாண்ட நடவடிக்கைகள் பின்வருமாறு

- இக்காலப்பகுதியில் சமாந்திரமாக தன் அதிகாரப் பலத்தை வளர்த்துக் கொண்டிருந்த தெதிகம பராக்கிரமபாகு மன்னனை கீழ்ப்படியச் செய்ய நடவடிக்கைகள் எடுத்தமை.

- பௌத்த சமயத்திற்குப் பெருமளவில் ஆதரவளித்து பிக்குமாரது உள்ளங்களை வென்றதுடன் பிரசித்தமான ஆட்சியாளனாக முயன்றமை. இதனால் தெதிகமவில் தங்கியிருந்த பிக்குகள் கோட்டை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் வந்து வசிக்கத் தொடங்கியமை.

- இலங்கைக்கு வந்த சீயம் மற்றும் காம்போஜ பிக்குகளினது குழுவொன்றிற்கு சிங்கள உபசம்பதா விழாவை தனது ஆதரவில் நடத்தியமை

- தெதிகம பராக்கிரமபாகு மன்னன் , 6ம் பராக்கிரமபாகு மன்னனது கீழ் செயற்பட்டிருப்பதாக பரவிசந்தேஸயில் உள்ள தகவல்கள் அடிப்படையில் தெளிவு பெற முடிகின்றது. இதனூடாகத் தெதிகம உட்பட நான்கு கோரளை மற்றம் மலைநாட்டுப் பிரதேசங்களில் தனது அதிகாரத்தைப் பலவடைய செய்ய முடிந்தமை.

- உலர் வலயம் மற்றம் ருஹூனு ரட்டையில் காணப்பட்ட சுதந்தி ஆட்சி அலகுகள் மற்றம் வன்னியர்களைக் கீழ்ப்படியச் செய்தமை , வன்னித் தலைவர்கள் 18 பேரைக் கீழ்ப்படியச் செய்ததாக சந்தேசயில் குறிப்பிடப்பட்டுள்ளமை.

- சப்புமல் குமார தலைமையில் பெரும் படை ஒன்றை அனுப்பி வடக்கே ஆரியச் சக்கரவர்த்தியின் கீழ் இருந்த யாழ்ப்பாண இராசதானியை கைப்பற்றியமை.

- மலைநாட்டில் ஜோதிய இளவரசன் ஏற்படுத்திய கலகத்தை அம்புலுகல குமாரனை அனுப்பி முறியடித்தமை.

- மலைநாட்டில் பலம் பெற்றிருந்த கிராமத் தலைவனான விக்கிரமபாகுவின் கீழ்ப்படிதலைப் பெற்றுக் கொண்டமை.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திருமதி. த.சதீஸ்கரன், ஆசிரியர், (வரலாறு) (யா/அத்தியார் இந்து கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு வே.தனேஸ்குமார் , ஆசிரியர் (த.தொ.தொ.) (கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



### வெளிநாட்டுப் போர் வெற்றிகள்.

- தென்னிந்தியாவின் அதிவீரராம பட்டினத்தை ஆக்கிரமிப்புச் செய்தமை.
- விஜய நகரப் பேரரசின் துறைமுகங்களை ஆக்கிரமிப்புச் செய்தமை.



### கலாசார ரீதியான வளர்ச்சி

- பழைய வழிபாட்டிடங்களை அபிவிருத்தி அடையச் செய்ய நடவடிக்கை எடுத்தமை.
- சிவனொளிபாதமலை , அத்தனகல்ல விகாரை , கடலாதெனிய , லங்காதிலக , மகியங்களை, களணிவிகாரை போன்ற பௌத்த வணக்கஸ்தலங்களை வளர்ச்சியடையச் செய்தமை.
- தனது தாயின் பெயரில் பெப்பிலியான சுனேத்திராதேவி பிரிவெனாவை அமைத்து அதன் நிர்வாக நடவடிக்கைகளுக்கு கிராமங்களைப் வழங்கியதாக பெப்பிலியான சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- பெருமளவினான பிரிவெனாக்கள் வளர்ச்சியுற்றிருந்,தமை மற்றும் கற்ற பண்டிதர் பலர் இருந்தமை.
- அரசன் உட்பட அமைச்சர்கள் பலர் நூலுருவாக்கத்தில் ஈடுபட்டமை.
- ஸ்ரீராமச்சந்திர பண்டிதர் போன்ற கற்ற பண்டிதர்கள் இலங்கை வந்தமை .





**ஒப்படை வினா :**

“6ம் பராக்கிரமபாகு மன்னனது நீண்ட ஆட்சிக் காலமானது போர் மற்றும் அமைதி தொடர்பாக இலங்கை வரலாற்றின் இறுதியான கீர்த்தி மிக்க காலப்பகுதியாகும்” இக் கூற்றினை விளக்குக.

தொகுப்பு : திருமதி. த.சதீஸ்கரன், ஆசிரியர், (வரலாறு) (யா/அத்தியார் இந்து கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு வே.தனேஸ்குமார் , ஆசிரியர் (த.தொ.தொ.) (கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk